DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.37/2010** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW.1** |
| **Name** | : | ஜார்ஜ் |
| **Father's Name** | : | தனிஸ்லாஸ் நாடார் |
| **Village** | : | மகராஜநகர் |
| **Taluk** | : | பாளையங்கோட்டை தாலுகா |
| **Age** | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 26.03.2021.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. 20.04.99 தேதிய கிரைய ஆவணம் வா.சா.ஆ.1. எனது பெயரில் உள்ள பட்டா 649 கணினி நகல் வா.சா.ஆ.2. வட்டாட்சியர்அலுவலகத்தில் ஏற்படுத்திய பட்டா எண் 649 வா.சா.ஆ.3. எனது பெயரில் உள்ள தீர்வை ரசீது வா.சா.ஆ.4. சுப்புலெட்சுமி பெயரில் உள்ள 10(1) அடங்கல் வா.சா.ஆ.5. வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா நடவடிக்கை வா.சா.ஆ.6. 04.08.2011 சீராய்வில் ஏற்பட்ட உத்தரவு வா.சா.ஆ.7. பிராதுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.